# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ  அதிவிசேஷமானது

අංක 1714/20 - 2011 ජූලි 15 වැනි සිකුරාදා - 2011.07.15

*1714/20 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது இல. : 3/2/கா. சு./167.*
*காணி அமைச்சின் குறிப்பு இல. : எல்டீ/05/2006/எச்டபிள்யூ/96.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

கொழும்பு மாவட்டத்தில் சீத்தாவக்க பிரதேச செயலாளர் பிரிவில், மடபத்துவை சிறுபிரிவில் பொரளுகொடை கிராமத்தில் அமைந்துள்ள மொத்த விஸ்தீரணம் 0.6867 ஹெக்டயார் கொண்ட நான்கு (04) காணித் துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

ஆரம்ப வரைபட இல. கொ. *8868*

**1. துண்டு இல. 1**
காணியின் பெயர் : பொரளுகொடலந்த ; விபரம் : தோட்டம், 03 தற்காலிகக் கட்டிடங்கள் மற்றும் தற்காலிகக் கட்டிடத்தின் பகுதி ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம்: 0.1150 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 2**
காணியின் பெயர் : சலாவவத்தை ; விபரம் : தரிசு நிலம் ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம்: 0.4837 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 3**
காணியின் பெயர் : பொரளுகொடலந்த ; விபரம்: தரிசு நிலம் ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம்: 0.0668 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 4**
காணியின் பெயர் : பொரளுகொடலந்த ; விபரம்: தரிசு நிலம் ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம்: 0.0212 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு சீத்தாவக்க பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2011ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ. டீ. எஸ். விஜேரத்ன,
பிரதேச செயலாளர்,
சீத்தாவக்க.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
சீத்தாவக்க,
*2011.07.11.*

*07-724*

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது இல. : 3/3/4/15.*
*காணி அமைச்சின் குறிப்பு இல. : எல்டீ/05/2007/வீஈபீ/224.*

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் அடிப்படையின் இல. 1693/3 உம் 2011.03.07 ஆந் திகதியுமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் இல. 03-617 வரை பிரசுரிக்கப்பட்ட இல. நு2512 ஆரம்ப

திட்டமிடல் பத்திர இல. நு 2521 என்பதாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகிறேன்.

ஜி. கே. ஜி. ஏ. ஆர். பி. கே. நந்தன,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
வலப்பனை,
2011.07.07.

07-719

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : பவி/இ/1/2/அத்/13.
காணி அமைச்சின் குறிப்பு இல. : எல்டீ/05/2001/எப்ஆர்/128.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பின் கீழ் 2010.11.30 ஆந் திகதிய என்னால் இல. 1682/14 இலக்கத்தை உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் படி குறிப்பிடப்பட்டுள்ள 2010.12.22ஆந் திகதியை நீக்கி அதற்காக 2011.08.10 ஆந் திகதி எனத் திருத்தி இவ்வறிவித்தலினை கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ளவாறு மீள்திருத்தம் செய்யப்படுவதை இத்தால் அறியத் தருகிறேன்.

உரிமைகோரும் திகதி 2010.12.15 ஐ 2011.08.01ஆகவும்
உரிமைக்கான பரிசோதனைத் திகதி 2010.12.22 யை 2011.08.10 ஆகவும் திருத்தம் செய்கின்றேன்.

ஆர். கே. ஜீ. டீ. கே. விஜேசிங்க,
பிரதேச செயலாளர்,
பன்விலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பன்விலை,
2011.06.24.

07-720

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 4/4/1-1/3( வெலும).

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், மாலேவன, நாகந்தலகொட, வராபிடிய மற்றும் கொடபிடிய ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள, ஆரம்ப வரைபட இல. க4312 இற்குரிய காணிகள் சம்பந்தமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் இல. 1711/10 மற்றும் 2011.06.21 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் நஷ்டஈடு கோருவதற்கான விசாரணைத் திகதி 2011.08.17 ஆந் திகதி என திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இதற்கமைய உரிமைகோரும் மற்றும் நஷ்டஈடு கோரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 2011.08.10 என நீடிக்கப்படுகின்றது.

தம்மிக ராஜபக்ஷ,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2011.07.13.

07 - 744

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : வ/18/67/2003.

2006.11.06 ஆந் திகதிய 1407/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரையில் பகுதி III இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது :

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில், வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், நாகம் பத்துவை சிறுபிரிவில் உள்ள, கிராம சேவகர் பிரிவு இல. 175 தெலகபாத, தெலகபாத கிராமத்தில் அமைந்துள்ள, ஆரம்ப வரைபடஇல. கம்3535 இல் காட்டப்பட்ட இரண்டு (02) காணித்துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

**1. துண்டு இல. 41**
காணியின் பெயர் : கஹடடகஹவத்தை, கெற்றகெலகஹவத்தை ; விபரம்: தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமைகோருபவர் : ஆர். எஸ். விஜேசிங்ஹ, இல. 146, தெலகபாத வீதி, வத்தளை ; விஸ்தீரணம்: 0.0014 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 42**
காணியின் பெயர் : கஹடடகஹவத்தை, கெற்றகெலகஹவத்தை ; விபரம்: தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமைகோருபவர் : டி. வீரரத்ன, இல. 144, தெலகபாத வீதி, வத்தளை ; விஸ்தீரணம்: 0.0001 ஹெக்டயார்.

சந்திமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
வத்தளை,
2011.07.05.

08-11

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.